FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8074791

C

1. District மாவட்டம்: நாகப்பட்டினம் PS காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நாகப்பட்டினம் Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 06/2021 Date நாள்: 01.08.2021

2. (i) Act சட்டம்: Cr.P.C. Sections பிரிவுகள்: 102 Cr.P.C. and

(ii) Act சட்டம்: PC(A) Act, 2018 Sections பிரிவுகள்: 7 and 7-A of the

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Prevention of Corruption (Amendment) Act, 2018

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 31.07.2021 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.00 Hrs Time to : நேரம் வரை 23.30 Hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.08.2021 Time : நேரம் 04.00 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.08.2021 Time : நேரம் 04.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written (computer typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 4 கி.மீ. தென்மேற்கு

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி வட்ட வழங்கல் அலுவலகம், நாகப்பட்டினம், நாகப்பட்டினம் Dt.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.D.சக்திவேல்

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் துரைராஜ்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 49/2021

(d) Nationality : நாட்டினம் இந்தியன்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர்

(g) Address : முகவரி மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) ① திரு.M.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம், ② திருமதி.மோகனதாரா, கணினியை கையாண்டு வரும் கணினி நபர், க/பெ.சண்முகம், 23 சிவசக்தி நகர் பனல் பண்ணைச் சேரி, நாகப்பட்டினம் ③ திரு.சுரேஷ் கண்ணன், வட்ட பொறியாளர், வட்ட வழங்கல் அலுவலகம், நாகப்பட்டினம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— வாசியான தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை —

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்பிக்கப்படுகிறது</u> இன்று 01.08.2021 ஆம் தேதி காலை 04.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் க.ரமேஷ் குமார் ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.D.முத்துவடிவேலு, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் என்பவர் கொடுத்த அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், திரு.D.முத்துவடிவேலு, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகிய நான், இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 31.07.2021 ஆம் தேதி 17.00 மணி முதல் 22.30 மணி வரை நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்தை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது திரு.M.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக பெற்று வைத்திருந்த மகஜரில் கண்டவாறு உள்ள மொத்த பணம் ரூபாய் 14,800/- இருந்தது திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி திடீர் சோதனையின்போது திருமதி.மோகனராதா, கணினியை கையாண்டு வரும் தனிநபர், க/பெ.சண்முகம், 23, சிவசக்தி நகர், தெற்கு

(தொடர்ச்சி இணைப்பில் உள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

1.8.21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

01.8.2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
01.08.2021 at. 08.00Hrs.

Name: பெயர் G. RAMESH KUMAR
Rank: நிலை Inspector of Police, Vigilance and Anti-Corruption, Nagapattinam. No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

**நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2021 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி** :-

பால்பண்ணைச்சேரி, நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக பெற்று வைத்திருந்த மகஜரில் கண்டவாறு உள்ள மொத்த பணம் ரூபாய் 2,250/- இருந்தது திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி திடீர் சோதனையின்போது திரு.L.சுரேஷ் கண்ணன், வட்ட பொறியாளர், வட்ட வழங்கல் அலுவலகம், நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக பெற்று வைத்திருந்த மகஜரில் கண்டவாறு உள்ள மொத்த பணம் ரூபாய் 4,000/- இருந்தது திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது மகஜரில் கண்டபடி திரு.M.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம், திருமதி.மோகனராதா, கணினியை கையாண்டு வரும் தனிநபர், க/பெ.சண்முகம், 23, சிவசக்தி நகர், தெற்கு பால்பண்ணைச்சேரி, நாகப்பட்டினம் மற்றும் திரு.L.சுரேஷ் கண்ணன், வட்ட பொறியாளர், வட்ட வழங்கல் அலுவலகம், நாகப்பட்டினம் ஆகியோர் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா அரசு நியாய விலைக்கடைகளின் விற்பனையாளர்களிடம் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணம் என்ற அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய். 21,050/- பணம் மற்றும் நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலக 1)அனுப்புநர் திரு.மா.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம் ந.க.எண்.3313/2020/ஈ1, நாள் 29.06.2021 என்ற கடிதத்தின் பின்புறம் அரசு நியாய விலை கடைகளின் நம்பர்கள் எழுதப்பட்டு அதில் தொகை எழுதப்பட்டுள்ள இரண்டு தாள்கள் மற்றும் ADD Member என்று டைப் செய்யப்பட்ட ஒரு தாள், 2)138 நியாயவிலை கடைகளின் மாதாந்திர அறிக்கைகள், 3)நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்தின் நகல் அட்டை பதிவேடு, 4)திருமதி.மோகனராதா அவர்களால் தன் கைப்பட எழுதப்பட்டு வட்ட வழங்கல் அலுவலரால் கையெழுத்திடப்பட்ட உணவு பொருள் வழங்கல் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இரசீது வழங்கிய புத்தகம் ஆகிய ஆவணங்கள் மற்றும் 1)திரு.M.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம், 2)திருமதி.மோகனராதா, கணினியை கையாண்டு வரும் தனிநபர், க/பெ.சண்முகம், 23, சிவசக்தி நகர், தெற்கு பால்பண்ணைச்சேரி, நாகப்பட்டினம் மற்றும் 3)திரு.L.சுரேஷ் கண்ணன், வட்ட பொறியாளர், வட்ட வழங்கல் அலுவலகம், நாகப்பட்டினம் என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். எனவே மேற்படி 1)திரு.M.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம், 2)திருமதி.மோகனராதா, கணினியை கையாண்டு வரும் தனிநபர், க/பெ.சண்முகம், 23, சிவசக்தி நகர், தெற்கு பால்பண்ணைச்சேரி, நாகப்பட்டினம் மற்றும் 3)திரு.L.சுரேஷ் கண்ணன், வட்ட பொறியாளர், வட்ட வழங்கல் அலுவலகம், நாகப்பட்டினம் என்பவர்களின்மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) D.முத்துவடிவேலு 1.8.21. (D.முத்துவடிவேலு), மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர். 01.08.2021. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர் இன்று 31.07.2021 ஆம் தேதி மாலை சுமார் 17.00 மணிமுதல் நாகப்பட்டினம்

மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலக கட்டிடத்தை ஒட்டினார்போல் உள்ள தெற்குபார்த்த வாசல் உள்ள நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்தை திரு.D.முத்துவடிவேலு, த/பெ.துரைராஜ், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.G.ரமேஷ் குமார் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் திரு.D.முத்துவடிவேலு அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்தில் ஒவ்வொரு மாதமும் நாகப்பட்டினம் வட்டத்திலுள்ள அனைத்து பொது விநியோக திட்டத்தின்கீழ் செயல்படும் அரசு நியாய விலை கடைகளின் ஒவ்வொரு விற்பனையாளர்களிடமும் திரு.M.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம், நாகப்பட்டினம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் அவர்கள் கையூட்டு கேட்டு பெறுவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலினை பெற்று இன்று 31.07.2021 ஆம் தேதி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் அவர்களுக்கு 13.30 மணிக்கு தகவல் தெரிவித்ததன் பேரில், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு, நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 16.00 மணிக்கு வந்தும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 31.07.2021 ஆம் தேதி 16.30 மணிக்கு இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு 17.00 மணிக்கு வந்து மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்தை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகமானது நாகப்பட்டினம் புதிய பேருந்து நியைத்திற்கு அருகில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றம் மற்றும் அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள வளாகத்தில் நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மேற்கு பக்கம் நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகம் உள்ளது. மேற்படி வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு மேற்கு பக்கம் நாகப்பட்டினம் மாவட்ட சிறைச் சாலையும், மேற்படி வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு எதிர்புறம் நாகப்பட்டினம் சிறைச்சாலையின் கார்டு அறையும் உள்ளது. மேற்படி நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்தின் நுழைவு வாயிலின் அருகே கிழக்கு பக்கம் இ-சேவை மையமும், அதனை அடுத்தார்போல் வடக்கு பக்கம் ஒரு பெரிய ஹாலும், அந்த ஹாலில் கிழக்கு பக்கம் திருமதி.மோகனராதா, கணினியை கையாண்டு வரும் தனிநபர், திரு.M.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம், திரு.சுரேஷ்கண்ணன், வட்ட பொறியாளர் ஆகியோரது மூன்று டேபிள்களுடன் கூடிய இருக்கைகளும், ஹாலின் வடக்கு பக்கம் உதவியாளரின் ஒரு டேபிளுடன் கூடிய இருக்கையும் உள்ளது. மேற்படி ஹாலுக்கு மேற்கு பக்கம் ஒரு டேபிள் மற்றும் இருக்கையுடன் கூடிய அறையும், அதற்கு மேற்கு பக்கம் கழிவறை மற்றும் பழைய பொருட்கள் உள்ள அறையும் உள்ளது. மேற்படி அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது 1)திரு.M.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம், 2)திருமதி.மோகனராதா, கணினியை கையாண்டு வரும் தனிநபர், 3)திரு.L.சுரேஷ் கண்ணன், வட்ட பொறியாளர், வட்ட வழங்கல் அலுவலகம், நாகப்பட்டினம், 4)திரு.A.வைத்தியநாதன்,

Data Entry Operator, இ-சேவை மையம் ஆகியோரை தவிர அரசு நியாய விலைக்கடையின் விற்பனையாளர்கள் சிலரும் அலுவலகத்திற்குள் இருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்து கொண்டனர். அப்போது மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சில நபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையில் கீழ்கண்ட நபர்கள் வைத்திருந்து ஆஜர் செய்த தொகைகள் சரியான முகாந்திரம் கூறிய கீழ்கண்ட தொகை அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவிமற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு.M.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம் | 1,200 |
| 2 | திருமதி.மோகனராதா, கணினியை கையாண்டு வரும் தனிநபர், க/பெ.சண்முகம், 23, சிவசக்தி நகர், தெற்கு பால்பண்ணைச்சேரி, நாகப்பட்டினம் | 420 |
| 3 | திரு.L.சுரேஷ் கண்ணன், வட்ட பொறியாளர், வட்ட வழங்கல் அலுவலகம், நாகப்பட்டினம், | 870 |
| 4 | திரு.A.வைத்தியநாதன், Data Entry Operator, இ-சேவை மையம், நாகப்பட்டினம் | 3,220 |
| 5 | திரு.R.ராஜேஸ், Data Entry Operator, ஆதார் சேவை மையம், நாகப்பட்டினம். | 100 |
| 6 | திரு.C.கார்த்திகேயன், Data Entry Operator, ஆதார் சேவை மையம், நாகப்பட்டினம். | 290 |
| 7 | திரு.S.பக்கிரிசாமி, Movement Clerk, TNCSC, மருங்கூர் | 4,780 |
| 8 | திரு.S.வெங்கடேசன், விற்பனையாளர், அரசு நியாய விலை கடை, திருபுகலூர் | 280 |
| 9 | திரு.S.கலீல்ரஹ்மான், விற்பனையாளர், அரசு நியாய விலை கடை, மாதிரிமங்கலம் | 5,820 |
| 10 | திரு.A.அமீருதீன், விற்பனையாளர், அரசு நியாய விலை கடை, காடம்பாடி | 1,840 |
| 11 | திரு.A.தியாகராஜன், விற்பனையாளர், அரசு நியாய விலை கடை, திருக்கண்ணபுரம் | 520 |
| 12 | நகல் அட்டைக்கான வசூல் செய்யப்பட்ட கட்டணத் தொகை | 1,080 |
| | **திரும்ப ஒப்படைக்கப்பட்ட மொத்தப் பணம்** | **20,380** |

திடீர் சோதனையின்போது நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலர் **திரு.M.பூபதி** என்பவரது டேபிள் டிராயரிலிருந்து ரூபாய் 14,800/- யையும், அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து ரூபாய் 1,200/-யையும் ஆஜர் செய்தார். மேற்படி வட்ட வழங்கல் அலுவலர் திரு.M.பூபதி என்பவர் டேபிள் டிராயரிலிருந்து ஆஜர் செய்த ரூபாய்

நோட்டுகளில் 500 x 14 = 7,000, 200 x 19 = 3,800, 100 x 31 = 3,100, 50 x 18 = 900 என்ற விபரப்படியான மொத்தம் ரூபாய் 14,800/- பணம் இருந்தது. மேற்படி பணம் பற்றி வட்ட வழங்கல் அலுவலர் திரு.M.பூபதி என்பவரிடம் விளக்கம் கேட்ட போது, மேற்படி பணம் இன்றையதினம் நடத்தப்பட்ட அரசு நியாயவிலை கடைகளின் மாதாந்திர கூட்டத்தில் கலந்துகொண்ட விற்பனையாளர்களிடம் ரூபாய் 100 லிருந்து 500 ரூபாய் வரை வசூல் செய்யப்பட்ட பணம் என்று தெரிவித்தார். மேற்படி பணம் ரூபாய் 14,800/- விற்பனையாளர்களிடம் கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூபாய் **14,800/-** மகஜரில் கைப்பற்றப்பட்டது. அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய் 1,200/- அவரது சொந்தபணம் என்றும் செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதால், அந்த பணம் ரூபாய் 1,200/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி வட்ட வழங்கல் அலுவலரின் டேபிளின் மேலிருந்த மஞ்சள் நிற முத்துமாரியம்மன் ஆலயம் வெளிப்பாளையம் என்ற பையில் ரூபாய் 1,080/- இருந்தது. மேற்படி பணம் பற்றி விளக்கம் கேட்க அந்த பணம் நகல் அட்டைக்காக வசூல் செய்யப்பட்ட கட்டணத் தொகை என்று கூறினார். மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட பதிவேடுகளை சரிபார்த்ததில் மொத்தம் ரூபாய் 1,160/- இருக்க வேண்டியதில் 1,080/- ரூபாய் மட்டும் இருந்தது. எனவே நகல் அட்டைக்காக வசூல் செய்யப்பட்ட கட்டணத் தொகையில் ரூபாய் 80/- குறைவாக உள்ளது. மேற்படி தொகை ரூபாய் 1,080/- வட்ட வழங்கல் அலுவலர் திரு.பூபதி அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இது குறித்த பதிவேட்டில் இது குறித்த குறிப்பினை எழுதப்பட்டு மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்தில் கணினியை கையாண்டு வரும் தனிநபரான **திருமதி.மோகனராதா**, க/பெ.சண்முகம், 23, சிவசக்தி நகர், தெற்கு பால்பண்ணைச்சேரி, நாகப்பட்டினம் என்பவரின் ஹேண்ட் பேக்கிலிருந்து ரூபாய் 2,250/- யையும், ஹேண்ட் பேக்கிலிருந்த பர்ஸிலிருந்து ரூபாய் 420/-யையும் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி திருமதி.மோகனராதா என்பவர் ஹேண்ட் பேக்கிலிருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 200 x 3 = 600, 100 x 16 = 1,600, 50 x 1 = 50 என்ற விபரப்படியான மொத்தம் ரூபாய் 2,250/- பணம் இருந்தது. மேற்படி பணம் பற்றி **திருமதி**.மோகனராதா என்பவரிடம் விளக்கம் கேட்ட போது, மேற்படி பணம் இன்றையதினம் நடத்தப்பட்ட அரசு நியாயவிலை கடைகளின் மாதாந்திர கூட்டத்தில் கலந்துகொண்ட விற்பனையாளர்களிடம் ரூபாய் 100 லிருந்து 500 ரூபாய் வரை வசூல் செய்யப்பட்ட பணத்தில் தனக்கு வட்ட வழங்கல் அலுவலர் கொடுத்த பணம் என்று தெரிவித்தார். மேற்படி பணம் ரூபாய் 2,250/- விற்பனையாளர்களிடம் கையூட்டாக பெறப்பட்ட பணத்திலிருந்து வட்ட வழங்கல் அலுவலர் கொடுத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூபாய் **2,250/-** மகஜரில் கைப்பற்றப்பட்டது. அவரது பர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய் 420/- அவரது சொந்தபணம் என்றும் செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதால், அந்த பணம் ரூபாய் 420/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திடீர் சோதனையின்போது நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்தில் வட்ட பொறியாளராக பணிபுரியும் **திரு.L.சுரேஷ் கண்ணன்** என்பவர் அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூபாய் 4,000/- யையும், பர்ஸிலிருந்து ரூபாய் 870/-யையும் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி திரு.L.சுரேஷ் கண்ணன் என்பவர் பேண்ட்

பாக்கெட்டிலிருந்து ஆஜர் செய்த ரூபாய் நோட்டுகளில் 2000 x 1 = 2,000, 500 x 4 = 2,000 என்ற விபரப்படியான மொத்தம் ரூபாய் 4,000/- பணம் இருந்தது. மேற்படி பணம் பற்றி திரு.L.சுரேஷ் கண்ணன் என்பவரிடம் விளக்கம் கேட்ட போது, மேற்படி பணம் இன்றைய தினம் வீட்டிலிருந்து எடுத்துவந்த பணம் என்று கூறியதால், அவரது வீட்டிற்கு அவரது செல்போனில் தொடர்பு கொண்டு பேசியபோது, முன்னுக்குபின் முரணாக அவரது மனைவி தெரிவித்ததால் மேற்படி பணம் ரூபாய் 4,000/- விற்பனையாளர்களிடம் கையூட்டாக பெறப்பட்ட பணத்திலிருந்து வட்ட வழங்கல் அலுவலர் கொடுத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி ரூபாய் **4,000/-** மகஜரில் கைப்பற்றப்பட்டது. அவரது பர்ஸிலிருந்து எடுத்து ஆஜர் செய்த ரூபாய் 870/- அவரது சொந்தபணம் என்றும் செலவிற்காக வைத்திருப்பதாக சொன்னதால், அந்த பணம் ரூபாய் 870/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திடீர் சோதனையின்போது நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்தில் கணினியை கையாண்டு வரும் தனிநபரான திருமதி.மோகனராதா என்பவரின் டேபிள் டிராயரில் அனுப்புநர் திரு.மா.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம் ந.க.எண்.3313/2020/ஈ1, நாள் 29.06.2021 என்ற கடிதத்தின் பின்புறம் அரசு நியாய விலை கடைகளின் நம்பர்கள் எழுதப்பட்டு அதில் தொகை எழுதப்பட்டுள்ள இரண்டு தாள்கள் மற்றும் ADD Member என்று டைப் செய்யப்பட்ட ஒரு தாள் கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி மூன்று தாள்கள் பற்றி வட்ட வழங்கல் அலுவலர் திரு.பூபதி மற்றும் திருமதி.மோகனராதா ஆகியோர் மாதாந்திர கூட்டத்திற்கு வரும் நியாய விலை கடை விற்பனையாளர்களிடம் மேற்படி தாள்களில் கண்டுள்ள தொகைகள் பெறப்பட்டு, திருமதி.மோகனராதா கைப்பட எழுதியது என்று இருவரும் தெரிவித்தனர். எனவே மேற்படி விபரப்படியான **மூன்று தாள்கள்** கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலர் திரு.பூபதி அவர்களிடம் திருமதி.மோகனராதா என்பவரின் பணிகள் குறித்தும், ஊதியம் குறித்தும் கேட்டபொழுது, மேற்படி திருமதி.மோகனராதா என்பவர் அரசுஊழியர் அல்லது தொகுப்பூதியத்தில் வேலை செய்யவில்லை என்றும், திருமதி.மோகனராதா என்பவர் வட்ட வழங்கல் அலுவலகத்தில் கணினி பதிவுகள் செய்வதும், வட்ட வழங்கல் அலுவலருக்கு உதவியாக இருந்தும் வருகிறார் என்றும், திருமதி.மோகனராதா என்பவருக்கு வட்ட வழங்கல் அலுவலர் திரு.பூபதி அவர்கள் இவ்வாறு மாதக்கடைசியில் வசூல் செய்யப்படும் பணத்திலிருந்து மாதாமாதம் ரூபாய் 4,000/- சம்பளமாக கொடுத்துவருகிறார் என்றும் வட்ட வழங்கல் அலுவலர் திரு.பூபதி அவர்கள் தெரிவித்தார். அதனை திருமதி.மோகனராதா அவர்களும் ஒப்புக்கொண்டார். திரு.மா.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம் அவர்களிடம் இன்றையதினம் நடத்தப்பட்ட அரசு நியாயவிலை கடைகளின் மாதாந்திர கூட்டத்தில் கலந்துகொண்ட விற்பனையாளர்களிடம் பெறப்பட்ட மாதாந்திர அறிக்கை பற்றி விசாரிக்க அவர் 138 நியாயவிலை கடைகளின் மாதாந்திர அறிக்கையை எடுத்து ஆஜர் செய்து, இதுவே அரசு நியாய விலைக்கடைகளின் விற்பனையாளர்கள் இன்று 31.07.2021 ஆம் தேதி நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டதற்கான ஆவணமாகும். இது தொடர்பாக வேறு எந்த பதிவேடுகளும் அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை என்று வட்ட வழங்கல் அலுவலர் தெரிவித்தார். மேலும் நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்தின் நகல் அட்டை பதிவேடு கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனையின்போது ஆஜரிலிருந்த திருமதி.மோகனராதா,

கணினியை கையாண்டு வரும் தனிநபர் மற்றும் திரு.சுரேஷ்கண்ணன், வட்ட பொறியாளர் ஆகியோரின் வருகை பதிவேடு பற்றி விசாரிக்க, வருகை பதிவேடு ஏதும் பராமரிக்கவில்லை என்று திரு.பூபதி தெரிவித்தார். வட்ட வழங்கல் அலுவலரின் வருகை பதிவேடு பற்றி கேட்க, வருகை பதிவேடு நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்படுவதாக தெரிவித்தார். மேற்படி திடீர் சோதனையின்போது குற்றமுறு எண்ணத்துடன் அரசு நியாய விலைக்கடைகளின் விற்பனையாளர்களிடம் கையூட்டாக பெற்ற தொகை என்ற அடிப்படையிலும் சரியான விளக்கம் தராமல் வைக்கப்பட்டிருந்த மேற்படி விவரபடியான மொத்தப்பணம் ரூபாய் 21,050/- மற்றும் 1)அனுப்புநர் திரு.மா.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம் ந.க.எண்.3313/2020/ஈ1, நாள் 29.06.2021 என்ற கடிதத்தின் பின்புறம் அரசு நியாய விலை கடைகளின் நம்பர்கள் எழுதப்பட்டு அதில் தொகை எழுதப்பட்டுள்ள இரண்டு தாள்கள் மற்றும் ADD Member என்று டைப் செய்யப்பட்ட ஒரு தாள், 2)138 நியாயவிலை கடைகளின் மாதாந்திர அறிக்கைகள், 3)நாகப்பட்டினம் வட்ட வழங்கல் அலுவலகத்தின் நகல் அட்டை பதிவேடு, 4)திருமதி.மோகனராதா அவர்களால் தன் கைப்பட எழுதப்பட்டு வட்ட வழங்கல் அலுவலரால் கையெழுத்திடப்பட்ட உணவு பொருள் வழங்கல் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இரசீது வழங்கிய புத்தகம் ஆகிய ஆவணங்கள் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் அவர்கள் 1)திரு.M.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம் மற்றும் 2)திருமதி.மோகனராதா, கணினியை கையாண்டு வரும் தனிநபர், க/பெ.சண்முகம், 23, சிவசக்தி நகர், தெற்கு பால்பண்ணைச்சேரி, நாகப்பட்டினம் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 31.07.2021 ஆம் தேதி இரவு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகளின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது. **பணிந்து சமர்பிக்கப்படுகிறது.** இன்று **01.08.2021** ஆம் தேதி காலை **04.00** மணிக்கு மேற்படி புகாரைப்பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு **குற்ற எண்.06/2021**, U/s. 102 Cr.P.C. and U/s. 7 and 7-A of the Prevention of Corruption(Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

01.08.2021
**(G.RAMESH KUMAR),**
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜர் மற்றும் 1)திரு.M.பூபதி, வட்ட வழங்கல் அலுவலர், நாகப்பட்டினம், 2)திருமதி.மோகனராதா, கணினியை கையாண்டு வரும் தனிநபர், க/பெ.சண்முகம், 23, சிவசக்தி நகர், தெற்கு பால்பண்ணைச்சேரி, நாகப்பட்டினம் மற்றும் 3)திரு.L.சுரேஷ் கண்ணன், வட்ட பொறியாளர், வட்ட வழங்கல் அலுவலகம், நாகப்பட்டினம் என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

01.08.2021
INSPECTOR OF POLICE
Vigilance and Anti Corruption